3301

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE

| வினா. இல | புள்ளிகள் |
|---|---|
| 1 | |
| 2 (i) | |
| 2 (ii) | |
| 3 (i) | |
| 3 (ii) | |
| மொத்தம் | |
| விடைத்தாள் பரீட்சித்தவர்: | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர்: | |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் /
Department of Examinations, Sri Lanka

# பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015)

# Open Competitive Examination for Recruitment to the Posts of Grade II of Class III Registrar Service - 2014 (2015)

## (03) மொழியும் கட்டுரையும்
## Language and Essay

*ஒரு மணித்தியாலம்*
*One hour*

- **எல்லா** வினாக்களுக்குமுரிய விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.
- **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

சுட்டெண் : ......................................

01. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஒன்றைத்** தெரிந்து **200 - 250** சொற்களுள் அமையுமாறு பகுப்பாய்வு ரீதியான கட்டுரை ஒன்றை எழுதுக.

(i) அதிகரிக்கும் சனத்தொகைக்கு வேண்டிய உணவை உள்ளூரிலேயே உற்பத்தி செய்யமுடியாமல் இருப்பது வர்த்தகத்தின் தேவையை அதிகரிக்கின்றது.

(ii) தொழில்நுட்பச் சாதனங்களின் கண்டுபிடிப்புகளால் மனித வாழ்க்கை நாளுக்குநாள் மாற்றங்கண்டு வருவதோடு சிக்கலுக்கும் உள்ளாகி வருகிறது.

(iii) இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் அச்சுறுத்தல்களை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கான உபாயங்கள்

(iv) 'அரச உத்தியோகத்தர்' 'அரச ஊழியர்' எனும் பதங்களைக் காட்டிலும், 'அரச சேவையாளர்' என்பது விருப்புக்குரியதும் அர்த்தபுஷ்டியானதும் ஆகும்.

.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................

[பக் 2 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

[பக் 3 ஐப் பார்க்க.

02. கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்து இலக்கம் **(அ)** முதல் **(ஊ)** வரையில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு நன்கு பொருந்துகின்ற விடையைத் தெரிந்து அதன் **இலக்கத்தை** அந்தந்தக் கூற்றுக்கு எதிரேயுள்ள **அடைப்புக்குள்** எழுதுக.

(i) பிரதானமாக பரவலான சுகாதார சேவைகள் மற்றும் கல்வி வாய்ப்புக்களின் பெருக்கம் என்பவற்றின் விளைவாக இரண்டாவது உலகப் போருக்கு பிற்பட்ட காலத்தில் இலங்கையின் மரண விகிதத்தில் கணிசமான அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட விருத்தி, சிறந்த பொதுச் சுகாதார நிலைமைகள், நோய்த் தடுப்பு திட்டங்களின் பரவலான உபயோகம் என்பனவும் இந்த முன்னேற்றத்தில் மிக முக்கியமான பங்கினை வகித்து வந்துள்ளன. பாதைகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றின் விரிவான ஒரு வலையமைப்பு கிராமப் பிரதேசங்களுக்கும் சுகாதார வசதிகளை எடுத்துச் சென்றிருந்தது. தனி நபர்கள் நீண்டகாலம் வாழ்ந்து வரும் பொழுதும் அந்த நீண்ட ஆயுளின் வாழ்க்கைத் தரம் முக்கியமான ஒரு பிரச்சினையாக இருந்துவரும் சந்தர்ப்பங்களிலும் மக்கள் தம்மைத் தாமே சில கேள்விகள் கேட்டுக் கொள்கின்றனர். நாங்கள் ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழ்ந்து வருகின்றோமா அல்லது எமது நீண்ட ஆயுள் காலத்தில் கணிசமான ஒரு பகுதியை நோயிலும் மன நல ஒழுங்கீனங்களிலும் நலிவுற்ற நிலையிலும் கழித்து வருகின்றோமா போன்ற கேள்விகளை அவர்கள் எழுப்பி வருகின்றார்கள். ஆரோக்கியமான வாழ்க்கை என்பதன் பொருள் அன்றாடக் கருமங்களில் வரையறைகள் அற்ற விதத்தில் ஆயுள் நீடிப்பு எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. அது சுறுசுறுப்பான ஆயுள் எல்லை அல்லது நலிவு நிலைமை அற்ற ஆயுள் எல்லை என்றும் அழைக்கப்படுகின்றது. ஆரோக்கியமான ஆயுள் எல்லை என்பது நோய் நொடிகள் முற்றிலும் இல்லாத நிலை எனப் பொருள்பட மாட்டாது. உண்மையிலேயே பெருந்தொகையான முதியவர்கள் நீரிழிவு அல்லது இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களுடன் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து தமது பணிகளையும் செய்து வருகின்றார்கள் ஆரோக்கியமான வாழ்க்கை எதிர்பார்ப்பு எனும் எண்ணக்கரு எதிர்காலத்தில் சுகாதாரம் மற்றும் அபிவிருத்தியை அளவிடலில் முக்கிய நியதியாக அமையும்.

(அ) இலங்கையில் மரணவிகிதம் கணிசமாகக் குறைந்தமை
   (1) இரண்டாம் உலகப் போர் முடிவுற்றமையால்,
   (2) பெருகிய சுகாதார கல்விச் சேவைகளால்
   (3) நோய்த்தடுப்புத் திட்டங்கள் தோல்வியுற்றமையால்
   (4) சிறந்த பொதுச் சுகாதார சேவை கிடைக்காமையால் (.........)

(ஆ) இவ்வுரைப் பகுதியின்படி, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னான இலங்கையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தில்
   (1) விருத்தி ஏற்படவில்லை, நோய்த்தடுப்பு சிறந்திருந்தது
   (2) விருத்தி ஏற்படவில்லை, சுகாதாரம் மட்டும் வளர்ந்தது
   (3) விருத்தி ஏற்பட்டது, சுகாதார சேவை பரவலானது
   (4) விருத்தி ஏற்பட்டது, கல்வி வாய்ப்புப் பெருகவில்லை (.........)

(இ) கிராமப்புறங்களுக்கும் சுகாதார வசதி சென்றமைக்கு முதன்மைக் காரணம்
   (1) பரவலான சுகாதார சேவை
   (2) மரண விகிதம் குறைந்தமை
   (3) நோய்த்தடுப்புத் திட்டம்
   (4) பாதை விரிவாக்கம் பெற்ற போக்குவரத்து வசதி (.........)

(ஈ) மக்கள் தம்மைத்தாமே கேள்வி கேட்கும் சந்தர்ப்பம்
   (1) நீண்ட ஆயுளின் வாழ்க்கைத்தரம் பிரச்சினையாகும் சந்தர்ப்பம்
   (2) கிராமப்புறத்துக்கு சுகாதார சேவை வராத சந்தர்ப்பம்
   (3) வாழ்க்கைத்தரம் உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் சந்தர்ப்பம்
   (4) தனிநபர் நீண்ட காலம் வாழமுடியாது போகும் சந்தர்ப்பம் (.........)

(உ) ஆயுளின் நலிவுற்ற நிலைகள் எனச் சுட்டப்பெறுபவை
   (1) நோயின்மையும் மனநலமும்
   (2) நோயும் மனநல ஒழுங்கீனங்களும்
   (3) நோயின்மையும் நல ஒழுங்கீனங்களும்
   (4) நோய் இல்லாமையும், மனநல ஒழுங்கும் (.........)

(ஊ) ஆரோக்கியமான வாழ்க்கை என்பது
   (1) அன்றாடக் கடமைகளில் வரையறையுள்ள அளவில் ஆயுள் நீடிப்பு
   (2) தினசரிக் கருமங்களில் நலமாக ஈடுபடுதல்
   (3) அன்றாட வேலைகளில் வரையறையற்ற விதத்தில் ஆயுள் நீடிப்பு
   (4) தினமும் உடற்பயிற்சி செய்து கடமைகளில் ஈடுபடல் (.........)

[பக் 4 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka

3301

(எ) சுறுசுறுப்பான ஆயுள் எல்லை என்பது
   (1) கடமையில் சுறுசுறுப்பாக ஈடுபடும் வயது எல்லை
   (2) நலிவு நிலையுள்ள ஆயுள் எல்லை
   (3) நலிவு அற்ற நிலையில் வேலைகளில் ஈடுபட முடியாத வயது எல்லை
   (4) நலிவு நிலையற்ற ஆயுள் எல்லை (.........)

(ஏ) ஆரோக்கியமான ஆயுள் எல்லை
   (1) நோய் முற்றிலும் இல்லாத நிலை எனப் பொருள்படும்
   (2) நோய் முற்றிலும் இருக்கும் நிலை எனப் பொருள்படும்
   (3) ஒரு நோயும் இருக்க மாட்டாது எனப் பொருள்படும்
   (4) சில நோய்கள் இருக்கலாம் எனப் பொருள்படும் (.........)

(ஐ) அபிவிருத்தி அளவிடலில் முக்கிய நியதியாக அமையக்கூடியது
   (1) ஆரோக்கியமான உடல் நலப்பயிற்சி
   (2) சுகாதார சேவைப் பெருக்கம்
   (3) ஆரோக்கிய வாழ்வு எதிர்பார்ப்பு
   (4) நோய்நொடி முற்றும் இல்லாத நிலை. (.........)

(ஒ) இவ்வுரைப் பகுதியின் மையக் கருத்து
   (1) இரண்டாம் உலகப்போரின் பின்னான இலங்கை பற்றியது
   (2) மரண விகிதம் குறைவுற்றமை பற்றியது
   (3) ஆரோக்கியமான ஆயுள் எல்லை பற்றியது
   (4) கிராமப் பிரதேசங்களுக்கு சுகாதாரம் சென்றமை பற்றியது (.........)

(ii) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து, அதன் கீழ் தரப்பட்டுள்ள (அ) முதல் (ஓ) வரையுள்ள கூற்றுக்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள **"ஆம்"** அல்லது **"இல்லை"** எனும் பதில்களில் உரிய கூற்று சரியாயின் **'ஆம்'** என்பதையும் பிழையாயின் **'இல்லை'** என்பதையும் குறிப்பிடுவதற்கு **பொருத்தமற்ற** பதிலைத் **தனிக்கோட்டினால் வெட்டி** விடுக.

உலக அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சியை ஒவ்வொரு அங்கத்தினனுமாகிய மனிதன் அறிவது அவசியமே. இதற்கு உதவி செய்வனவே ஊடகங்கள். பிறர் கட்டுப்பாடுகளுக்கு அடிபணியாது சுதந்திரமாகக் கருத்து வெளிப்படுத்தும் ஊடகங்கள், சமுதாயத்தில் கருத்து மாற்றங்களுக்கு வழிகோலுகின்றன. பல அரசியல் மாற்றங்கள் இவ்வூடகங்களால் சாத்தியமாகி உள்ளன.

ஒரு காலத்தில் ஊடகங்கள் சமூகப் பொறுப்புடையனவாக இருந்தன. நல்லவை தீயவை என்பவற்றை பகுத்துணர்ந்து நீதியுணர்வோடு செய்திகளை வெளியிட்டன. நடுவுநிலை, காழ்ப்புணர்வு இன்மை என்பன காணப்பட்டன. இன்று நிலைமை அவ்வாறில்லை. சமூகநல ஆரோக்கியம் முக்கியமானது அன்று. செய்தி ஒரு விற்பனைப் பண்டமாகிவிட்டது. இன்றைய ஊடகங்கள் வன்முறைக்கு முதன்மை இடம் தருவதற்கு இதுவே காரணம்.

தனிமனித சார்பு ஊடகங்களாக முகநூல், தனிமனித இணையப் பக்கங்கள் போன்ற சமூக வலைத்தளங்கள் காணப்படுகின்றன. செய்திகளைக் கடத்தும் தன்மையை நோக்கினால் இவையும் ஊடகங்களே. இந்த ஊடகங்கள் குறித்த தனிநபரின் பண்புநலன் சார்ந்து நல்ல விடயங்களைத் தருகின்றபோதிலும் தனிமனித இழிவுகள் வசைபாடுதல்களால் சீரழிந்து உள்ளன. யாரும் எவரைப்பற்றியும் எதையும் பதிவேற்றம் செய்யலாம் எனும் நிலை உள்ளது. செய்தியின் உண்மைத் தன்மை குறித்து கவலைகொள்வதில்லை. இது தீங்கானதொரு விடயமாகும்.

(அ) உலக நிகழ்ச்சிகளை மனிதன் அறிய வேண்டியதற்கான காரணமாகக் கட்டுரையாசிரியர் சுட்டுவது, மனிதன் உலகில் உறுப்பினன் என்பதையே. **(ஆம்/இல்லை)**

(ஆ) சமுதாய மாற்றங்களுக்கு அரச ஊடகங்கள் வழிகோலுகின்றன. **(ஆம்/இல்லை)**

(இ) இன்றைய ஊடகங்கள் சமூகப்பொறுப்புடையன என்ற கருத்துடன் ஆசிரியர் உடன்படுகின்றார் **(ஆம்/இல்லை)**

(ஈ) நடுவுநிலை, நீதி உணர்வு என்பன முன்னைய ஊடகங்களிலும் இருந்திராத பண்புகள் **(ஆம்/இல்லை)**

(உ) சமூகநல ஆரோக்கியம் ஊடகங்களால் பேணப்பட வேண்டியதொன்று என்று கட்டுரையாசிரியர் கருதுகிறார். **(ஆம்/இல்லை)**

(ஊ) வன்முறைச் செய்திகளுக்கு முதன்மையிடம் தர வன்முறைகள் பெருகிவிட்டமையே காரணம் **(ஆம்/இல்லை)**

[பக் 5 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka

(எ) சமூக வலைத்தளங்களை கட்டுரையாசிரியர் ஊடகங்களாக ஏற்கவில்லை என்பது தவறு. (ஆம்/இல்லை)

(ஏ) முகநூல் முதலியவை தீங்கான வசைபாடுதல்களை மட்டும் தருவதாக ஆசிரியர் கருதவில்லை (ஆம்/இல்லை)

(ஐ) சமூகவலைத்தளங்களாகிய முகநூல் முதலியவற்றின் முதன்மையான தீங்கென ஆசிரியர் குறிப்பது, எல்லாரும் அதைப் பயன்படுத்துவதையேயாகும். (ஆம்/இல்லை)

(ஒ) கட்டுரையாசிரியர் இப்பந்தியின் மூலம் ஊடகங்களின் வளர்ச்சி நிலையைப் படம்பிடித்துள்ளார். (ஆம்/இல்லை)

03. (i). பின்வரும் சொற்றொடர்களுக்கான மிகவும் பொருத்தமான **சொல்லை** தரப்பட்டுள்ள சொற்களுள் இருந்து தெரிந்து அதன் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

(அ) ஒரு நிறுவனம் தொடங்கி 75 ஆண்டுகள் பூர்த்தியாவதை நினைவு கூரும் விழா
(1) மணிவிழா (2) வெள்ளி விழா (3) பவள விழா (4) வைர விழா (.........)

(ஆ) பண்டைய அரச மனைகளில் பெண்களுக்கென வகுக்கப்பட்ட இடம்
(1) உப்பரிகை (2) அந்தப்புரம் (3) ஓலக்கம் (4) அரச பள்ளி (.........)

(இ) மிகப் பழைய காலத்தில் கல்வி போதிக்கப்பட்ட இடம்
(1) பன்னசாலை (2) ஆதீனம் (3) ஆதுலர்சாலை (4) குருகுலம் (.........)

(ஈ) ஆணித்தரமாகக் கூறினார் என்பதில், 'ஆணித்தரமாக' என்பது சுட்டுவது
(1) ஆழத்தை (2) உறுதியை (3) வேகத்தை (4) விவேகத்தை (.........)

(உ) தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாக்கும் இடம்
(1) காட்சிச்சாலை (2) புதைபொருள் (3) நூதனசாலை (4) சுவடிகள்கூடம் (.........)

(ஊ) சங்கம் ஒன்றினது பொருளாளர் பதவிக்கு முன்பு வழங்கப்பட்ட பெயர்
(1) தனாதிகாரி (2) கணக்காளர் (3) பட்டயக்கணக்காளர் (4) தவிசாளர் (.........)

(எ) செய்த உழைப்புக்காக ஒருவருக்கு வழங்கப்படுவது
(1) தானம் (2) கையுறை (3) ஊதியம் (4) மானியம் (.........)

(ஏ) நூல் ஒன்றின் முன்னுரை போலக் கருதப்படுவது
(1) பாயிரம் (2) விமரிசனம் (3) குறிப்புரை (4) விதப்புரை (.........)

(ஐ) நாட்டினது அமைச்சுக்களுக்கு வேண்டியளவு நிதி வழங்குவது
(1) வங்கி (2) திறைசேரி (3) பாராளுமன்றம் (4) ஜனாதிபதி செயலகம் (.........)

(ஒ) ஒரு கொள்கையை நிறைவேற்றுவதற்காக உணவைத் துறக்கும் அகிம்சை வழி
(1) துறவு (2) விரதம் (3) நோன்பு (4) உண்ணாவிரதம் (.........)

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள சிறு வாக்கியங்களை இணைத்து எழுத்து இலக்கணப் பிழைகளின்றி **தனி வாக்கியமாக்கி** மீண்டும் எழுதுக.

(i) பாடசாலை நேர அட்டவணையில் ஏற்படும் மாற்றங்கள் முறையாகப் பதியப்படல் வேண்டும். அதிபரின் கையொப்பத்துடன் உறுதி செய்யப்படுதல் வேண்டும். முறையாக அலுவலகத்தில் பேணப்படுதல் அவசியம்.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

[பக் 6 ஐப் பார்க்க.

Department of Examinations, Sri Lanka

(ii) விளையாட்டுக்கள் மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையன. நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் என்பவற்றை விளையாட்டுக்கள் பிரதிபலிக்கின்றன. அவை மக்களுக்கு மிகுந்த பயன் உடையன.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(iii) இன்றைய தொழில் முகாமைத்துவத்தில் பணமே மிக அடிப்படையான குறிக்கோளாகிவிட்டது. தொழில் முகாமைத்துவம் உயர் விழுமியங்களை மெல்லத் தொலைத்து வருகின்றது. இளைஞர்கள் பணம் ஒன்றினை நோக்கியே ஆற்றுப்படுத்தப்படுகின்றனர்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(iv) எந்தவொரு ஆளுமையையும் காலச்சூழலே உருவாக்குகின்றது. ஆறுமுகநாவலரை அவர் தோன்றிய காலத்தில் வைத்தே மதிப்பிட வேண்டும். ஐரோப்பியராட்சிக் காலப் பின்புலத்திலேதான் ஆறுமுகநாவலரை விமர்சிக்க வேண்டும்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(v) விரதங்கள், நோன்புகளின் நோக்கம் நிறைவேறவில்லை. முன்னோர்கள் விரதங்கள் நோன்புகளை ஏற்படுத்திய நோக்கம் மனவலிமை பெறுவதற்கேயாகும். மக்கள் மனந்தூய்மை பெற வேண்டும் என்பதும் அவர்கள் நோக்கமாகும்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

* * *

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka